

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் மாவட்ட செயலாளர்,சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி தலைமையில், நகர கழக செயலாளர் ம. அன்பழகன் வரவேற்பில் ஜோலார்பேட்டை ரயில் நிலையம் அருகில் நடைபெற்றது. டி.எம்.கதிர்ஆனந்த் எம்பி, தலைமை கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், ஏர்போர்ட் பொன்னுசாமி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள். இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், மு.மாவட்ட பொறுப்பாளர் ம.முத்தமிழ்ச்செல்வி, ஆர்.எஸ்.ஆனந்தன், டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், கே.பி.ஆர்.ஜோதிராஜன், என்.கே.ஆர்.சூரியகுமார், நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன், கு.ராஜமாணிக்கம், சி.சத்தியமூர்த்தி, மு.அசோகன், பி.எம்.முனிவேல், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் எம்.ஆர்.ஆறுமுகம், வி.எஸ்.சாரதிகுமார், ப.ச.சுரேஷ்குமார், க.உமாகன்ரங்கம், கே.சதிஷ்குமார், கே.ஆர்.திருப்பதி, வி.எஸ்.ஞானவேலன், கவிதாதண்டபாணி, டி.அசோக்குமார், அ.மோகன்ராஜ், க.இராமமூர்த்தி, த.முரளி, எம்.ஸ்ரீதர், ஆ.செல்வராஜ், எஸ்.உமாசந்திரன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர். வீ.வடிவேல் நன்றி கூறினார்.

# தமிழ்நாடு முட நீக்கியல் மருத்துவர்கள் சங்க 58 ஆவது மாநில மாநாடு!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்து வாழ்த்துரை!

கடலூர், பிப்.10-

தமிழ்நாடு முட நீக்கியல் மருத்துவர்கள் சங்க 58 ஆவது மாநில மாநாடு, புதுச்சேரி சங்க மித்ரா கன்வெர்ஷன் சென்ட்ரலில், 7.02.2025, வெள்ளிக்கிழமை, மாலை 6 மணி அளவில், மாநில தலைவர் டாக்டர் தீன்முகமது இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. மாநில செயலாளர் நாராயணன் முன்னிலை வகித்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் வரும் ஆண்டுசங்க தலைவர் டாக்டர் என்.மணிகண்டன்,

டி.என்.டி. சங்க நிகழ்ச்சிகள் தலைவர் பேராசிரியர் டாக்டர் ஆர்.நீல கிருஷ்ணன், செயலாளர் டாக்டர்எஸ்.நடராஜன், பொருளாளர் டாக்டர் ஏ.சரவணன், எம்ஜிஆர் பல்கலைகழக முன்னாள் துணைவேந்தர் மூத்த முட நீக்கியல் மருத்துவர் டாக்டர் மயில்வாகணன், விநாயக மிஷன் துணை வேந்தர் டாக்டர் கணேசன், ஓ.ஏ.எஸ்.ஐ. எஸ். தலைவர் டாக்டர் பி.என்.வாசுதேவன், செயலாளர் டாக்டர் ரோஷன்குமார், பிஓஏ சங்க தலைவர் டாக்டர் எம்.பிரகாஷ், செயலாளர் டாக்டர் கே.சரவணன், சோழமண்டல ஆர்த்தோ டாக்டர் சங்க தலைவர் டாக்டர். எஸ். இளங்கோவன், டி.என். ஓ.ஏ. செயின்டிபிக் சங்க தலைவர் டாக்டர் சந்தோஷ்குமார்,ஈசி நெம்பர் டாக்டர் பாலமுருகன்,

விழுப்புரம் வடக்கு மாவட்டதி.மு.க செயலாளர் டாக்டர் ப. சேகர், கழகமருத்துவர் அணி இணை செயலாளர் டாக்டர் ஆர். லட்சுமணன் ,எம். எல் .ஏ., கழக தகவல் தொழில் நுட்பஅணி துணை செயலாளர் டாக்டர் கா.தருண், கடலூர் கிழக்கு மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ப.கமலக்கண்ணன், மூத்த முடநீக்கியல் மருத்துவர்கள்டாக்டர் ரமேஷ் பாபு, டாக்டர் பாரதிச்செல்வன், டாக்டர்கோவர்த்தனா, டாக்டர் பாண்டியன், டாக்டர் சிவசுப்பிர மணியம், டாக்டர் கார்த்திக்,

கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ். ராஜா, ஒன்றிய கழக செயலாளர் முத்து.பெருமாள், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர். பாலமுருகன் மற்றும் முடநீக்கியல் மருத்துவ சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முட நீக்கியல் மருத்துவர்கள் சங்க 58வது மாநில மாநாடு புதுச்சேரி சங்கமித்ரா கன்வெர்ஷன் சென்ட்ரலில், 7.02.2025, வெள்ளிக்கிழமை, மாலை 6 மணி அளவில், மாநில தலைவர் டாக்டர் தீன்முகமது இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. மாநில செயலாளர் திருநாராயணன் முன்னிலை வகித்தார். இதில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் ,கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

### ஈரோடு கிழக்கு தொகுதியில் தி.மு.க. வெற்றி!

# நல்லாட்சிக்கு கிடைத்த சாட்சியம்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் புகழாரம்!

சென்னை, பிப். 10–

ஈரோடு கிழக்கு தொகுதியில் தி.மு.க. வெற்றி என்பது நல்லாட்சிக்கு கிடைத்த சாட்சியம் என்று தினகரன் நாளேடு தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.



தினகரன்

நல்லாட்சிக்கு சாட்சியம்

இதுகுறித்து 9.2.2025 தேதிய தினகரன் நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:–

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரை தமிழ்நாட்டுக்கு தந்த நந்த பெருமைக்குரிய நகரம் ஈரோடு. இங்குள்ள கிழக்கு தொகுதியின் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரான ஈ.வி. கே.எஸ்.இளங்கோவன், கடந்தாண்டு டிசம்பர் 14ம்தேதி இயற்கை எய்தினார். இதையடுத்து இடைத்தேர் தல் நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டது இந்திய தேர்தல் ஆணையம். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக வேட்பாளராக வி.சி.சந்திரகுமார் அறிவிக்கப்பட்டார். பிரதான எதிர்க் கட்சியான அ.தி.மு.க. இத்தேர்தலை புறக்க ணித்தது. நாம் தமிழர் கட்சி சார்பில் சீதாலட்சுமி நிறுத்தப்பட்டார். இவர்கள் மட்டுமன்றி பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் 13வேட் பாளர்கள், சுயேட்சைகள் 31பேர் என்று வேட்பாளர்கள் களத்தில் நின்றனர்.

பரபரப்பான அரசியல் சூழல்களுக்கு இடையே இம்மாதம் 5ம்தேதி தேர்தல் நடந்தது. இதில் ஆண்கள் பெண்கள், இதரர் என்று 70சதவீதம் பேர், தங்களது வாக்குகளை செலுத்தி ஜனநாயக கடமையாற்றினர். பலத்த எதிர்பார்ப்புகளுக்கு இடையே வாக்கு எண்ணிக்கை நேற்று காலை தொடங்கியது. முதல் சுற்றில் இருந்தே தி.மு.க. வேட்பாளர் முன்னிலை வகித்தார். இறுதிகற்று நிலவரப்படி 90,629 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிவாகை சூடினார். அவருக்கு அடுத்து 23,810வாக்குகள் பெற்ற நாம்தமிழர் கட்சி வேட் பாளர் டெபாசிட் இழந்துள்ளார்.

பெரியார் மண்ணில் திராவிட மாடல் ஆட்சிக்கு ஆர்ப்பரிக்கும் அமோக ஆதரவை அள்ளித்தந்துள்ளனர் மக்கள் என்பதை இந்த தேர்தல் முடிவுகள், மீண்டும் பறைசாற்றியுள்ளது. கடந்த 2021ம் ஆண்டு ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கு நடந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் வேட் பாளராக போட்டியிட்ட திருமகன் ஈவெராவுக்கு 62,495வாக்குகள் கிடைத்தது. அவரை எதிர்த்து போட்டியிட்ட அ.தி. மு.க. வேட்பாளர் யுவராஜா 56,004வாக்குகள் பெற்றார். திருமகன் ஈ.வெ.ரா.வின் வெற்றி என்பது 6,491வாக்குகள் வித்தியாசத்தில் நிர்ணயிக்கப்பட்டது.

அவரது மறைவுக்கு பிறகு மீண்டும் நடந்த இடைத்தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போட்டி யிட்டு 1,10,156வாக்குகள் பெற்றார். அ.தி. மு.க. வேட்பாளராக போட்டியிட்ட தென்னரசுக்கு 43,923வாக்குகள் கிடைத்தது. 66,233 வாக்குகள் வித்தியாசத்தில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வெற்றிபெற்றார்.

இந்தநிலையில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் திடீர் மறைவுக்கு பிறகு தற்போது மீண்டும் ஒரு இடைத்தேர்தல் நடந்து முடிந்துள்ளது. இதில் தி.மு.க. வேட்பாளராக போட்டியிட்ட வி.சி.சந்திரகுமாருக்கு 1,14,439வாக்குகள் கிடைத்துள்ளது. நாம்தமிழர் கட்சிக்கு 23,810வாக்குகள் கிடைத்துள்ளது. 75சதவீத வாக்காளர்களின் ஆதரவை பெற்று 90,629வாக்குகள் வித்தியாசத்தில் வரலாற்று வெற்றியை பதிவு செய்துள்ளார் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் சந்திரகுமார்.

அதாவது 2021சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் போட்டியிட்ட போது வெற் றியை தக்கவைத்த வாக்குகளின் எண்ணிக்கை 6,491. இரண்டு ஆண்டுகள் ஆட்சி கடந்த நிலையில் இடைத் தேர்தல் நடந்தது. இதில் வெற்றிக்கான வாக்கு வித்தியாசம் 66,233. இதுவே மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம். இப்படிப்பட்ட நிலை யில் தற்போது நடந்த இடைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளரின் வெற்றியை நிர்ணயித்துள்ள வாக்கு வித்தியாசம் 90,629. இது இமாலய சாதனை வெற்றி என்று சொல்வதை விட, நல்லாட்சிக்கு பெரும் சாட்சியமான இதயங்களின் வெற்றி என்பதே பொருத்தமானது. போட்டியிடவில்லை என்று சிலர் வாக்குகளை மடைமாற்றம் செய்தாலும், மக்களின் மனதை யாரும் இடமாற்றம் செய்யமு டியாது என்பதையும் அம்பலமாக்கியுள்ளது இந்த இடைத் தேர்தல்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### செஞ்சி ஒன்றியம்

# அனந்தபுரம் கழக முன்னோடி வி.சேதுராமன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி! நேற்று இறுதிச் சடங்குகள்!

செஞ்சி, பிப்.10-

விழுப்புரம் மாவட்டம் - செஞ்சி ஒன்றியம் - அனந்தபுரம் பேரூராட்சியைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி வி. சேதுராமன் அவர்கள், நேற்று முன்தினம் திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 85.



இளம் பிராயம் தொட்டு கழகத்தின் உறுப்பினரான அவர், கழகத்தின் மீது தீவிர கொள்கைப் பற்றுமிக்கவராக விளங்கியவர், கழகம் நடத்தும் பொதுக்கூட்டங்கள், போராட்டங்களில் எல்லாம் பங்கேற்றவர், கொண்ட கொள்கையில் இருந்து கிஞ் சிற்றும் வழுவிடாதவராக விளங்கிய வர், சேதுராமன் செட்டியார் அவர்கள்.

கழகப் போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் மீது பக்தியும், கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீது மிகுந்த பாசமும் கொண்டவர் அவர்.

அவர் வாழ்ந்த பகுதியில் இளைஞர்கள் பலரை கழகத்தில் ஈடுபாட்டுடன் பணியாற்றும் வண்ணம் ஒரு தூண்டு கோலாக விளங்கியவர். அவரது மறைவு அனந்தபுரம் வட்டார கழகத்திற்கு பேரிழப்பு எனின் அது மிகையல்ல.

மறைந்த கழக முன்னோடி சேதுராமன் அவர்களுக்கு மனைவியும், 3 மகன்களும், ஒரு மகளும், 4 பேரன்களும் உள்ளார்கள். சேதுராமனின் புதல்வர்களில் ஒருவரான மகேஷ்குமார், 'முரசொலி' கணிப்பொறிப்பிரிவில் பணி புரிந்தவராவார்.

சேதுராமன் அவர்களின் மறைவறிந்து கழகத்தினர் பலரும் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். அவரது இறுதி ஊர்வலம் நேற்று (9.2.2025- ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில் எண்.6, ஈஸ்வரன் கோவில் தெரு, அனந்தபுரம், செஞ்சி எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

# நான்காம் ஆண்டு நினைவு நாள்



## இரா.விசுவநாதன்

முன்னாள் அவைத் தலைவர், 105 வது வட்டம் அண்ணாநகர் பகுதி – தி.மு.க

மறைந்த நாள்: 10.02.2021

**தந்தையே! தெரியுமா உனக்கு!**
**அன்று "O.K. O.K." தொலைக்காட்சியில்**
**திரையிடும் போதெலாம் பார்த்து மகிழ்ந்தாய்!**
**இன்று, இன்னும் அரைநூற்றாண்டிற்கு**
**கழகத்தை கொண்டு செல்லவிருக்கும்**
**பெரியாரின் பெயரனாய் வாள் சுழற்றும்**
**மாட்சியைக் கண்டால், கொண்டாடித் தீர்ப்பாய்!**
**என்றென்றும் தங்கள் வழியில்!**
**இருவண்ணக் கொடி நிழலில்!**

திருமதி.**கிருஷ்ணவேணி விசுவநாதன்**


**வி.நந்தகுமார்** பி.ஏ.,
**ந.கவிதா**
**ந.சூர்யா** பி.காம்.,எம்.பி.ஏ.,
**ந.மாதங்கி**

**வி.நன்மாறன்** பி.எஸ்சி.,பி.எல்.,
கூடுதல் அரசு வழக்குரைஞர், சென்னை உயர்நீதி மன்றம்
**ஆ.கலைமதி** பி.ஏ.,பிஎட்.,
**ந.க.இயல்** பி.எஸ்.சி.,
**ந.க.இசை**

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ம.கி. அம்பிகாபதி

**பிப்ரவரி 10 (2004)**



வடக்கு எல்லை போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் மகனான இவர், இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கினார்.

முப்பது ஆண்டுகள், அரக்கோணம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

"அரக்கோணம் என்றாலே அம்பிகாபதிதான். கழகத்தை ஆலமரமாய் வளர்த்தவர்" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**